1992 பிப்ரவரி 5]

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகால இருண்ட ஆட்சியில் நலிந்துபோன மலைவாழ் மக்களின் வாழ்க்கை முன்னேற, $1\frac{1}{2}$ கோடி ரூபாய்த் திட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காங்கேயத்திற்கு வருகை தந்த தினம், இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். அங்கு வாழும் மலைவாழ் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். வீதிகளில் விளக்கு வசதிகள் சரிவர இயக்கப்படவில்லை. இதனால், இந்தத் திட்டத்தை 1993 ஆம் ஆண்டிலாவது, தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடியில் மின் சீரமைப்பிற்காக, உடனடியாக கஜவட்டி என்கிற இடத்திலே, 110/11 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம், 1992 ஆம் ஆண்டு நிறுவி இயக்க முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. அதன் மூலம் தற்போது அந்தப் பகுதியில் உள்ள மின் தடைகள், மின் கோளாறுகள், குறைந்த அழுத்தம் எல்லாம் சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர, 1995 ஆம் ஆண்டு எடுக்க இருக்கிற திட்டத்திற்கு, வனப்பகுதியிலே அது செல்கின்ற காரணத்தினால், மத்திய அரசினுடைய அனுமதி பெறவேண்டியிருப்பதாலே, அதிலே சில சிக்கல்கள் இருக்கிற காரணத்தினாலேதான், இந்தத் திட்டம் 1994–95 -லே தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்த அனுமதி உடனடியாக மத்திய அரசிடமிருந்து கிடைத்தவுடன், அதற்கான முழு மூச்சுடன், புரட்சித் தலைவியினுடைய அரசு ஏற்பாடுகளைச் செய்து, அந்தத் திட்டமும் தொடங்கப்படும். தற்

முற்பகல் 10-15

போது தாளவாடி பகுதிக்கு, 1992ஆம் ஆண்டிலே கெஜவட்டியிலே தொடங்குகின்ற இந்த திட்டம் அந்தப் பகுதியினுடைய மின் திறனை அதிகப்படுத்தி அந்தப் பகுதியை மேம்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 51, திரு. செ. பெருமாள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

51—

கரியக்கோயில் நீர்த்தேக்க அணை.

*3989—திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 பிப்ரவரி 5

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் பாப்பிநாயக்கன் பட்டியில் கட்டப்படும் கரியக்கோயில் நீர்த்தேக்க அணை எப்போது கட்டி முடிக்கப்படும்?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந்தத் திட்டம் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பாப்பிநாயக்கன்பட்டியில் கரிய கோயில் நீர்த்தேக்கத் திட்டம் புரட்சித் தலைவர் ஆட்சியில், ஏழை—எளிய விவசாயிகள் பயன்பெறும் வகையிலே ஆரம்பிக்கப் பட்டது. இந்த அணையானது 7, 8 ஆண்டுகள் ஆகியும் இன்னும் கூட முடிக்கப்படாமல் உள்ளது. புரட்சித் தலைவர் ஆட்சியில் இந்த அணை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் மீண்டும் ஆரம்பித்து முடித்துக் கொடுத்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை எளிய விவசாயிகள் பயன் பெறுவதற்கு வசதியாக இருக்கும். எனவே, மார்ச் மாதம் என்பதை விட, மிக விரைவிலே முடிப்பதற்கு இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே இந்தத்திட்டத்தை உடனடியாக முடிக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டு அந்தத் திட்டம் காலதாமதம் ஆனதற்கான காரணங்களையும் ஆய்ந்து உடனடியாக மிக வேகமாக இந்தத் திட்டத்தை நாங்கள் செயலாற்றிக்கொண்டிருக் கிறோம். இந்தத் திட்டம் கால தாமதம் ஆனதற்கான காரணங் களை நான் சொல்லியாக வேண்டும். இதற்காக வனத்துறை யிடம் அனுமதி வாங்க வேண்டிய காரணத்தினாலே, மைய அரசினுடைய அனுமதி பெறுவதிலே கொஞ்சம் காலதாமதம். அதற்குப் பின்னாலே இந்த நீர்த்தேக்கப்பகுதியிலே இருக்கிற மண் பகுதி கூழாங் கற்களாக அமைந்துவிட்ட காரணத்தாலே அந்த திட்டத்தை நிறைவேற்றுவதிலே சிக்கல்கள் இருந்தன. ஆகவே தான் இந்தத் திட்டம் கால தாமதம் ஆகியது. என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே உடனடியாக அங்கே அதிகாரிகளையெல்லாம் அதிகமாக நியமித்து, இந்த 7, 8 மாதத்திற்குள்ளேயே பணி முடுக்கிவிடப் பட்டு நிச்சயமாக 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிந்துவிடும். 1992 மார்ச் என்பதில் இன்னும் ஒரு மாத

1992 பிப்ரவரி 5]

காலம்தான் இடையிலே இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, நிச்சயமாக அது முடிக்கப்பட்டு விடும் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 52, திரு. ச. காந்திராஜன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

52—

வேடசந்தூரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர்.

*275—திரு. ச. காந்திராஜன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் அணைக்கட்டு குடிநீர்த் திட்டம் மூலம் வறட்சிப் பகுதியான வேடசந்தூர் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆத்தூர் அணைக்கட்டிலிருந்து வறட்சிப் பகுதியான வேடசந்தூர் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் ஆய்வில் இல்லை. ஆனால் உலகவங்கி நிதி உதவியுடன் வேடசந்தூர் குடிநீர்த்துணைத் திட்டத்தின் அனைத்து பணிகளும் 11—6—1989-இல் முடிக்கப்பெற்று முழுப்பயனுக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் வறட்சிப் பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக தெரியும். அந்த அளவிலே தான் அங்கே எதிர்காலத்திலே ஏற்படுகின்ற பிரச்சினைகளையெல்லாம் கருத்திலே கொண்டு அந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். ஆத்தூர் அணைக்கட்டிலேயிருந்து ஏற்கெனவே திண்டுக்கல்லிலே கலெக்டர் அலுவலகம் வரை பைப் லைன் போடப்பட்டு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. எனவே அதற்கு அருகாமையிலே இருக்கிறது என்ற காரணத்தினாலேயும், இந்தத்திட்டத்திற்கு அதிகம் செலவாகாது என்கிற நோக்கத்தோடும் இந்தத்திட்டத்தைப்பற்றி நான் கேட்டிருந்தேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டிலாவது அதை கருணை உள்ளத்தோடு பரிசீலிப்பார்களா என்பதை இந்த அவையின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.